Original Suit No.521/2017 நாள்: 22.07.2024

**வா.சா.2 சிவகுமார்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் வாதியும் ஆதிசிவன் பைனான்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்து வருகிறோம். சாட்சி லோகநாதனை எனக்கு 20 வருடங்களாக தெரியும். பிரதிவாதியை எனக்கு 15 வருடங்களாக தெரியும். இந்த ஆதிசிவன் பைனான்ஸ் தொழில் தவிர வேறு தொழில் இல்லை. நான் இதுவரைக்கும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தது இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ரசீது எண்.423 ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. இந்த ரசீதில் உள்ள கையொபபம் என்னுடையது தான் என்றும், நான் தற்போது நீதிமன்றத்தில் என்னுடையது அல்ல என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடன் சுப்பிரமணி வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. அப்போது வாதி, லோகநாதனும் இருந்தார்கள். நானும் பிரவீனும் ஒன்றாக வாதி வீட்டிற்கு சென்றோம். பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்க கூடிய விசயத்தை வாதி என்னிடம் கூறவில்லை. அன்றைக்கு தான் பிரதிவாதி என்னிடம் கூறினார். பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லபடும் பணம் வங்கியில் இருந்து வந்த பணமா என்று நான் பார்க்கவில்லை. அந்த பணம் 500 ரூபாய் தாள்கள் கொண்டது. கடனுறுதி சீட்டு, ஸ்டாம்பு யார் கொண்டு வந்தார்கள் என்று கேட்டால் பிரவீன் கொண்டு வந்தார். கடனுறுதி சீட்டில் எத்தனை பேனாக்கள் பயன்படுத்தப்பட்டது என்று கேட்டால் 2 என்று நினைக்கிறேன். கடன் கொடுத்த அன்று பிரவீனுக்கு என்ன வருமானம் என்று

எனக்கு தெரியாது. பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். கடனுறுதி சீட்டில் உள்ள விவரங்களை 4 பேரும் கலந்து தான் எழுதினோம். அதில் தொழில் நிமித்தம் மற்றும் குடும்ப தேவைக்காக கடன் கொடுக்கப்பட்டதாக உள்ளது. வாசாஆ.1ல் பைனான்ஸ்காக என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டு காலை 9–9.30 குள்ளாக எழுதப்பட்டது. மொத்த நடவடிக்கையும் சுமார் 15–30 நிமிடத்திற்குள் முடிந்துவிட்டது. ஆதிசிவன் பைனான்ஸ், ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ் பிரதிவாதி எத்தனை ஆண்டுகள் வரவு செலவு வைத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ.1 அடிப்படையில் பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.6,00,000/ கடன் பெறவில்லை என்றும் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான், வாதி, வாசா.3 லோகநாதன் ஆகியோர்கள் சேர்ந்து தயார் செய்தது தான் வாசாஆ.1 என்றால்சரியல்ல. ஆதிசிவன் பைனான்ஸ், ஆதிசிவன் கேப்பிடல்ஸ் என்ற இரண்டு நிறுவனங்கள் உள்ளது. இது போக ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ் என்று நிறுவனம் உள்ளது. ஆதிசிவன் பைனான்ஸ்ல் நிர்வாக பங்குதாரர்களாக வாதியும் பொம்மு ராஜ் என்பவரும் இருக்கிறார்கள். ஆதிசிவன் கேப்பிடல்ஸ்ல் வாதியும், ராசப்பன் என்பவரும் இருக்கிறார்கள். ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் யார் நிர்வாக பங்குதாரர் என்று எனக்கு தெரியாது. நான் ஆதிசிவன் பைனான்ஸ், ஆதிசிவன் கேப்பிடல்ஸ் என்ற இரண்டு நிறுவனங்களில் வாதியுடன் நான் பங்குதாரராக இருந்து வருகிறேன். மேற்படி நிறுவனங்களுக்கும் கூட்டாண்மை உடன்படிக்கை பத்திரம் நிறுவனத்தில் தான் இருக்கிறது. வாதிக்கு ஆதரவாக பொய்யான ஆவணம் தயார் செய்து அதற்கு ஆதரவாக பொய்யான வாக்குமூலம்

தாக்கல் செய்து அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசா.1 எனக்கு உறவுமுறையில் மாமா முறை வேண்டும்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.

Original Suit No.521/2017 நாள்: 22.07.2024

**வா.சா.3 லோகநாதன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி சுப்ரமணி ஆதிசிவன் பைனான்ஸ், ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் பங்குதாரராக இருந்து வருகிறார்.நான் ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் பங்குதாரராக இருந்து வருகிறேன். எனக்கு வாதி சித்தப்பா முறை வேண்டும். வாசா.2 எனக்கு நண்பர். நான் பங்குதாரராக இருக்கும் நிறுவனத்தில் சிவகுமார் பங்குதாரராக இல்லை. வாசா2 ஐ நண்பர் என்ற முறையில் 10, 15 வருடங்களாக தெரியும். வாசா2 எனக்கு பழக்கத்தின் அடிப்படையில் நெருங்கிய நண்பராகிவிட்டார். ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் நானும், வேலுசாமியும் நிர்வாக பங்குதாரர். வாதி பங்குதாரராக உள்ள வேறு நிறுவனங்களில் வாதியை தவிற வேறு யார் நிர்வாக பங்குதாரர் என்று எனக்கு தெரியாது. நான் தற்செயலாக வாதி வீட்டிற்கு சென்ற போது பிரவீன் என்பவருக்கு பணம் கொடுப்பதாகவும் அதற்கு சாட்சி கையொப்பம் செய்ய சொன்னதன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தேன். வாதிக்கு திருமணமாகி குழந்தைகள் இருக்கிறார்கள். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி அன்று நானும் வாதி மட்டும் தான் வாதி வீட்டில் இருந்தோம். புரோநோடு, ஸ்டாம்பும் பிரவீனும், வாசா2 வரும் போது கொண்டு வந்தார்கள். அந்த புரோநோட்டில் நான் ஒரு பேனாவும், வாசா2 ஒரு பேனாவும், பிரதிவாதி ஒரு பேனாவுமாக 3 பேனாக்கள் பயன்படுத்தப்பட்டது. கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகை வங்கி கட்டா என்று கேட்டால் இல்லை. பாண்டுக்குரிய விவரங்களை பிரவீன் சொல்ல சிவகுமார் எழுதினார். வாசாஆ.1

கடனுறுதி சீட்டில் வாசகங்கள் நிரப்பட்டு தொகை வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு, பிரதிவாதி கையொப்பம் செய்த பிறகு அதன் பிறகு சிவகுமார் கையொப்பம் செய்தார். அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன். வாசாஆ.1ல் முதலில் உள்ள கையொப்பம் என்னுடையது. 2வது உள்ள கையொப்பம் சிவகுமார் உடையது. என்னிடம் காட்டப்படும் ரசீது எண்.423ல் உள்ள கையொப்பம் சிவகுமாரின் கையொப்பமா என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டின் அடிப்படையில் பிரதிவாதி ஒருபோதும் கடன் வாங்கியது இல்லை என்றும் வாசாஆ.1 கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவே இல்லை என்றும், நான், வாதி, வாசா.2 ஆகியோர்கள் ஒரு மோசடியாக கடனுறுதி சீட்டை உருவாக்கி அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 29.05.2015 அன்று ரூ.6,00,000/- பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்றுக் கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதிசீட்டில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை கடன் வாங்கும் சமயத்தில் பைனான்ஸ் மற்றும் sharemarketல் தொழில் செய்து வந்தார். அவர் எனக்கு அறிமுகம் ஆனவர். ஆனால் நெருங்கிய நட்பு இல்லை. அவர் குடும்ப செலவிற்காக வாங்கியதாக வாசாஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.